

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிகள் உட்பட்ட நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார் உடன் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, அழகிரி சதாசிவம், தமிழ காஅமுதரசன், எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, மு.பகலவன், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், ஜி.ஸ்டாலின்,கே.சுரேஷ், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி எம்.எல்.ரவி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி , பா.செ.குணசேகரன், பி. வெங்கடாஜலபதி, கே.எஸ்.மணி, டாக்டர்.கே.பரிமளம், கி.வே.ஆனந்தகுமார் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர் ஆ.சத்தியவேலு, ந.பரிமளம் , ஜான் பொன்னுசாமி, அபிராமி குமரவேல் , இரா.அறிவழகன், நா.செல்வசேகரன், மு.முரளிதரன் கா.சு.ஜெகதீசன், ஆ.ராஜா ஏ.ஆர்.டி.உதயசூரியன், வே.ஆனந்தகுமார், ஜி.ரவிக்குமார், பி.முத்து கா.சு.தமிழ்உதயன், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளனர்



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில் கி.பூபதி, என்.கண்ணன் வரவேற்புரையில் க.ரமேஷ், எச்.பாஸ்கரன், சரஸ்வதி சந்திரசேகர் முன்னிலை வகித்தனர். தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக், தலைமை கழக இளம் பேச்சாளர் ரூ.கீர்த்தனா ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ, அ.தமிழ்மாறன், என்.நவீன், திருநீர்மலை த. ஜெயக்குமார், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னார்ட், கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். எம்.ஜெயபால் நன்றி கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்!

# 38 மாவட்டங்களிலும் நடப்போம் நலம் பெறுவோம் 2.0 திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஜூன்.8-

முதலமைச்சர் அவர்களால், 38 மாவட்டங்களிலும் நடப்போம் நலம் பெறுவோம் 2.0 விரைவில் தொடங்கி வைக்கப் பட உள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நாமக்கல் (தெற்கு) அரசு மேல்நிலைப்பள்ளியில் நேற்று (07.06.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நடப்போம் நலம் பெறுவோம் - சுகாதார நடைபாதை திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.ச.உமா, தலைமையில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணன் ஆகியோர் முன்னிலையில், பொதுமக்களுடன் 8 கி.மீ தூரம் நடை பயிற்சியினை மேற்கொண்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலோடு, ஜப்பான் நாட்டில் உள்ள ஜப்பான் பன்னாட்டு முகமையில் ஜப்பான் நிதி ஆதாரம் குறித்து கருத்துகளை கேட்டு பெறுவதற்காக தமிழ்நாடு சுகாதாரத்துறை அலுவலர்களுடன் டோக்கியோவிற்கு சென்றிருந்தோம். டோக்கியோவில் 8 கி.மீ தூரத்திற்கான நடைபாதை ஹெல்த் வாக் என்ற பெயரில் வடிவமைக்கப்பட்டிருந்தன. சாலைகளில் இருபுறங்களிலும் மரங்கள் நடப்பட்டு, இருக்கைகள் அமைத்து, நடப்பதனால் கிடைக்கும் நன்மைகள் குறித்து எடுத்துரைக்கும் வகையில் விளம்பர பலகைகளுடன் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. நாளொன்றிற்கு சுமார் 10,000 அடிகள் நடக்கும் பொழுது உடலுக்கு எந்த விதமான நோய்பாதிப்பு ஏற்படாது. எனவே, அதன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாட்டில் இத்திட்டம் செயல்படுத்துவது குறித்து கருத்து தெரிவிக்கப் பட்டது.



தொற்றா நோய்களைத் தவிர்க்கவும், கட்டுப்படுத்தவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்திட நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இ ந் ந டை ப் ப யி ற் சி திட்டத்தினை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டார்கள்.

அதன்படி, தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 8 கி.மீ தூரம் அடையாளம் காணப் பட்டன. இருபுறங்களிலும் விளம்பர பலகைகள் வைக்கப் பட்டு, இருக்கைகளும் போடப்பட்டன. ஒரு சில மாவட்டங்களில் மரங்களும் நடப்பட்டன. இந்நடைப்பயிற்சி திட்டத்தினை 2023 நவம்பர் திங்கள் 4ம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் மிகச்சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்றைய தினம் நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு முடிவுற்ற கட்டிடப்பணிகளை திறந்து வைப்பதற்கும், புதிய கட்டிடப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கவும், வருகை தந்ததையொட்டி, நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் பொதுமக்களுடன் சுமார் 8 கி.மீ. நடைபயிற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நடைபயிற்சியில் நடப்போர் நலச்சங்கத்தைச் சார்ந்த சுமார் 700க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். தமிழ்நாட்டிலேயே நடப்போர் நலச்சங்கத்தில் 700 பேர் உறுப்பினர்களாக தினந்தோறும் நடைப்பயிற்சி மேற்கொள்வது என்பது, நாமக்கல் மாவட்டம் தான் முதலிடமாக உள்ளது.

இன்றைய தினம் நடப்போர் நலச்சங்க உறுப்பினர்களுடன் 8 கி.மீ. நடைபயிற்சி மேற்கொள்ளப்பட்டது. 46 இடங்களில் நடப்பதனால் கிடைக்கும் நன்மைகள் குறித்த விளம்பர பலகைகள் நிரந்தமாக வைக்கப்பட்டுள்ளது. நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் நடைப்பயிற்சி பாதையானது, நாமக்கல் (தெற்கு) அரசு மேல்நிலைப் பள்ளி, கொண்டிசெட்டிபட்டி, டிரினிட்டி கல்வி நிறுவனம், அண்ணா பூங்கா வழியாக சென்று மீண்டும் நாமக்கல் (தெற்கு) அரசு மேல்நிலைப் பள்ளியில் நிறைவடையும் வகையில் சுமார் 8 கிலோமீட்டர் தூரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 38 மாவட்டங்களிலும் நடப்போம் நலம் பெறுவோம் 2.0 விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) சு.வடிவேல், நாமக்கல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கே. சாந்தா அருள்மொழி, இணை இயக்குனர் (மருத்துவப்பணிகள்) மரு.அ.ராஜ்மோகன், மாவட்ட நல அலுவலர் மரு.க.பூங்கொடி உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சட்டக் கல்லூரியில் சேரும் மலைவாழ் மாணவர்!

# உள்ளம் உவகையில் நிறைகிறது தம்பி பரத்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன்.8-

சட்டக் கல்லூரியில் சேரும் மலைவாழ் மாணவர் பரத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-

உள்ளம் உவகையில் நிறைகிறது தம்பி பரத் அவர்கள் சட்டம் பயின்று தன் அறிவொளியை இந்தச் சமூகத்துக்கு வழங்கிட வேண்டும் என வாழ்த்துகிறேன். அவரது சட்டப் படிப்புக்குத் தி.மு.க. சட்டத்துறையும் அதன் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அவர்களும் துணை நின்று அவரை வழிநடத்துவார்கள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர் பாபு தலைமை !

# துறைமுகம் டி.கே. சங்கர்- எம்.கார்த்திகேயன் இல்ல மணவிழா!


## முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது இல்லத்தில் நடத்தி வைக்கிறார்

சென்னை, ஜூன்.8,

துறைமுகம் பகுதி பிரநிதிநிதி டி.கே.சங்கர் - எஸ்.அனுசுயா ஆகியோரின் புதல்வர் டி.கே.எஸ்.சூர்யா, எம்.கார்த்திகேயன்கே.கலைவாணி ஆகியோரின் புதல்வி எம்.கே. நிலா ஆகியோரின் மணவிழா இன்று (8.6.2025 ஞாயிறு) காலை 9 மணிக்கு சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வர் அவர்கள் இல்லத்தில் நடைபெறுகின்றது. மணவிழாவை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமை யேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி 9.6.2025திங்கள் கிழமை அன்று மாலை 9 மணிக்கு கொசப்பேட்டையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகின்றது. மணவிழா வரவேற்பிற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர் பாபு தலைமை வகித்து மணமக்கள் டி.கே.எஸ். சூர்யாஎம்.கே. நிலா ஆகியோரை வாழ்த்துகிறார்.

மேலும்,மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி., இ, பரந்தாமன் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன், எஸ்.முரளி, சொ.வேலு, எஸ்.ராஜசேகர், பி.எச். யாழினி, வி.சுதாகர், ராஜேஷ்வரி ஸ்ரீதர், எம்.விஜயகுமார், ப.ஸ்ரீராமுலு, பரிதி இளம் சுருதி, ராஜேஷ் ஜெயின், சுமதி புத்தநேசன், ஜி.ராமமூர்த்தி, ஒய்.அபாய், ப.ஜெகதீஷ், ஆர்.டி.சங்கர் நானா, பா.அண்ணாதுரை, பா .கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், மா.ஜெய்சங்கர், டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.ப.பிரபாகரன், சு.மனோகர், டி.தயாளன்,ந.பாலு,சி.சேகர், ஆர். எம். ரங்கநாதன், டி.கே. கலைவாணன், ஜி.ராஜாத்தி, டி.கே. தமிழ்வாணன், மு.கு.சு. மோசஸ், டபிள்யூ. பொன்மொழி, டி.கே.எஸ்.பிரபாகரன், எஸ்.கார்த்திக், டாக்டர் கே. கோகுலக்கிருஷ்ணன், டி.ஆர்.குமார், எம். பார்த்திபன், என்.முருகன், முனுசாமி, கே.நாகராஜ், மோகன், எம். சீனிவாசன், மணிவண்ணன், எம்.மணிமொழி,வினோத்குமார், கர்ணா, ராமச்சந்திரன், தினகரன், பி.சந்திரசேகர், பி.ராஜசேகர், ஐ.சுமன்,எல். அஜித், ஐ.விஜய், என்.ராம்கி, நித்யானந்தன், இ.ஜெயபிரகாஷ், பி. கவிதாசன், ஐ. வெங்கடேசன், முரளிகிருஷ்ணன்,கலையரசன், எம்.தமிழரசு,ஸ்ரீராம், னேஷ்குமார், பிரதீப்குமார், எஸ்.கேத்தீஸ், ஆகாஷ், கௌதம், கௌசிக், அரிபிரசாத், தேவபிரசாத், பிரத்விக், சமயத்தா, விக்ரம்,கே.கிருத்விக், சித்தார்த், பி.மகிழினி, ராகுல், ஐ.வரிஷித்,வி.ராஜா, பன்னீர்செல்வம், சுப்புராயண், கா.கோ. கோமகன் தன.பிரபாகரன், ஆதி அசோக்,முத்து,ரவிச்சந்திரன், பலராமன்,பாளையம், பன்னீர்செல்வம், மாஸ்டர் நாதன்லி மற்றும் பலர் கலந்து கொண்டுமண மக்களை வாழ்த்துகின்றனர்.



மணவிழா வரவேற்பிற்கு வருகை தருவோரை சென்னை கிழக்கு மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி அனைவரையும் வரவேற்கிறார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர் மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (09.06.2025 - திங்கள்கிழமை) மாலை 6 மணிக்கு திருவள்ளூர் அடுத்த காக்களூர் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள RM கெஸ்ட் ஹவுஸ் இல் நடை பெறவுள்ளது.

மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் கூட்டம் முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

அது சமயம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: காணொளி காட்சி வாயிலாக கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டத்தின் பொருள் குறித்து

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 108வது நாள்!

## அம்பத்தூர் தெற்கு பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூன். 08-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 108வது நாள் அம்பத்தூர் தெற்கு பகுதி - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும்



சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 108 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (07.6.2026) அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 89 -அவ்வை நகர் கோல்டன் காலனி கார்னர். 2) வட்டம் 90 - பாடி புதுநகர், சென்னை. ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி. எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/ வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி,

நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதா கிருஷ்ணன், த.கண்ணபி ரான், எம். கமல் எம்.சி, மு. சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு . வி ஜ ய கு ம ா ர் , த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு69ல் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் சமூகநலக் கூட கட்டுமானப் பணியினைப் அமைச்சர் .பி.கே.சேகர்பாபு , பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் .ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவாலங்காடு கிழக்கு ஒன்றியம் சின்னம்மா பேட்டை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பல்நோக்கு கட்டடம் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் எஸ். மகாலிங்கம், மாவட்ட துணை செயலாளர் சி. ஜெயபாரதி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களாம்பாக்கம் எம். பன்னீர்செல்வம், ஒன்றிய கழக நிர்வாகிகள் ரமேஷ், நீலாவதி சீனிவாசன் ஜீவன் ஞானபிரகாசம், ஏ. பி. செந்தில்குமார், வழக்கறிஞர் டி.தினகரன், முனி கிருஷ்ணன், ஞானமூர்த்தி, புருஷோத்தமன், நாகராஜ் கிளைச் செயலாளர்கள் சீனிவாசன், மூர்த்தி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.